

கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகம் திருமயம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, அரிமளம் தெற்கு ஒன்றிய கழகம், கும்மங்குடி ஊராட்சி, பூத் எண் 274 ல் நடைபெற்ற என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி கூட்டத்தில் BLA2, BLC மற்றும் BDA ஆற்றிய பணிகளை ஆய்வு செய்து, மேலும் அவர்கள் ஆற்ற வேண்டிய பணிகளை குறித்து புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி உரையாற்றினார். உடன் அரிமளம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் பொன்.ராமலிங்கம், அரிமளம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் வீ.ஆர்.இளையராஜா, பொதுக்குழு உறுப்பினர் சு.கலைவாணி சுப்பிரமணியன், முன்னாள் அரிமளம் ஒன்றியகுழுத் தலைவர் மேகலா முத்து, BLA2, BDA (பூத் பூத் டிஜிட்டல் ஏஜென்ட்), BLC உறுப்பினர்கள், கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக ஓரணியில் தமிழ்நாடு கழக உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் அன்னவாசல் தெற்கு ஒன்றியக் கழகம் சார்பில் மாவட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே. செல்லபாண்டியன் தலைமையில் ஒன்றிய செயலாளர் கே.எஸ்.சந்திரன் ஏற்பாட்டில் கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி எண்ணை மேலப்பட்டியில் நடைபெற்ற தலைக்கவசம் வழங்கும் நிகழ்ச்சி அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன் , கழக அயலக அணி செயலாளர் முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, விராலிமலை சட்டமன்றத் தொகுதி பார்வையாளரும் தஞ்சாவூர் துணை மேயருமான டாக்டர் அஞ்சுகம் பூபதி ஆகியோர் வாழ்த்துரையில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி சிறப்புரையாற்றி இருசக்கர வாகன ஓட்டிகளுக்கு தலைகவசம் வழங்கி, இருசக்கர வாகன விழிப்புணர்வு பேரணியில் கலந்துகொண்டு சிறப்பித்தார். நிகழ்வில் தென்னலூர் எம்.பழனியப்பன், ஆர்.ஆர்.எஸ். மாரிமுத்து, எம்.கோவிந்தராஜ், மு.பி.ம.சத்தியசீலன், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.

### நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., எம் பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. முன்னிலை!

# மயிலாடுதுறையில் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள்!

### அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார்!

மயிலாடுதுறை, ஜன. 2–

துணை முதலமைச்சர் அவர்கள் காணொலி காட்சி வாயிலாக நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்ததை தொடர்ந்து மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட ரங்கில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்களை பிற்படுத் தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார்கள்.

மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை சார்பில் மயிலாடுதுறை நகராட்சி, சீர்காழி நகராட்சி, குத்தாலம் பேரூராட்சி, மணல்மேடு பேரூராட்சி, வைத்தீஸ்வரன் கோவில் பேரூராட்சி, தரங்கம்பாடி பேரூராட்சி ஆகிய நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது நிகழ்ச்சிக்கு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ்.ஸ்ரீகாந்த் தலைமை தாங்கினார். மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் மயிலாடுதுறை, சீர்காழி நகராட்சிகளுக்கும், குத்தாலம், தரங்கம்பாடி, வைத்தீஸ்வரன் கோயில், மணல்மேடு ஆகிய பேரூராட்சிகளுக்கும் டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்களை பிற்படுத்தப்ப ட் ட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கி பேசுகையில்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் பேரில், நமது தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் நகர்ப்புறங்களில் இத்திட்டம் செயல்பட வேண்டும் என்பதற்காக நமது இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முதற்கட்டமாக ஈரோட்டில் இன்று 13 மாவட்டங்களுக்கு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்துள்ளார்.

மயிலாடுதுறைக்கு எந்த மாவட்டத்திற்கு இல்லாத அளவிற்கு இங்கே சாய் விளையாட்டு மைதானம் இருக்கின்ற மாவட்டம் நமது மயிலாடுதுறை மாவட்டமாக உள்ளது. இங்கு இரண்டு மத்திய, மாநில அரசு விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் இங்கே இருக்கிறீர்கள். மற்றவர்களை விட விளையாட்டுக்கள் நம்மை வேறுபடுத்தி காட்டுகிறது. எல்லோரையும் பெயர் சொல்லி கூப்பிடுவோம் எல்லோரையும் மனிதர்களாக பார்ப்போம் உங்களை மட்டும் தான் வீரர்கள், வீராங்கனைகளாக அழைக்கக் கூடிய பெருமை விளையாட்டில் உள்ளவர்களுக்கு இருக்கிறது. துணை முதலமைச்சர் அவர்கள் 2024–2025 நிதியாண்டிற்கான இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் மானியக் கோரிக்கையின் போது டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி ஆகிய உள்ளாட்சி அமைப்புகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படும் என அறிவித்தார்கள்.

அதன்படி, இன்று இத்திட்டமானது தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. மயிலாடுதுறை மாவட்டத்தில் சீர்காழி நகராட்சி, மயிலாடுதுறை நகராட்சி, குத்தாலம் பேரூராட்சி, மணல்மேடு பேரூராட்சி, தரங்கம்பாடி பேரூராட்சி, வைத்தீஸ்வரன் கோவில் பேரூராட்சி ஆகியவைகளுக்கு உட்பட்ட 123 வார்டுகளுக்கு 30 விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்பு வழங்கப்படுகிறது. இதனை, விளையாட்டு வீரர்கள் பயன்படுத்தி தங்களது விளையாட்டுத் திறனை மென்மேலும் மேம்படுத்திக் கொள்ள வேண்டும் இவ்வாறு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்சிவ.வீ.மெய்யநாதன் பேசினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தகோ.ஸ்டாலின், கூடுதல் ஆட்சியர்(வளர்ச்சி) கோகுல். மாவட்ட வருவாய் அலுவலர் ஆர்.பூங்கொடி,கழக கொள்கை பரப்புத் துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.என்.ரவி, மாவட்ட துணை செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, ஒன்றிய கழக செயலாளர் செல்ல சேது.ரவிக்குமார், மங்கை எம்.சங்கர், ப. முருகமணி, அமிர்த.விஜயகுமார், பஞ்சு.குமார், மயிலாடுதுறை நகர்மன்ற தலைவரும், மயிலாடுதுறை நகரக் கழக செயலாளர் குண்டாமணி (எ) என் .செல்வராஜ், பொதுக்குழு உறுப்பினர் நத்தம் ஏ.வின்சென்ட், ஹர்ஷத், அ. காந்தி,பேரூர் கழக செயலாளர் எஸ்.கே முத்துராஜா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் – நடப்பு கல்வி ஆண்டில்

# மாணவர்களுக்கு 60 லட்சம் கட்டணமில்லா பேருந்துப் பயண அட்டை வழங்கி புதிய சாதனை!

### அமைச்சர் சா.சி.சிவசங்கர் தகவல்!

சென்னை, ஜன.2–

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையின்படி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் நடப்பு கல்வி ஆண்டில் (AY 2025–26) பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு 60 லட்சம் கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகளை வழங்கி புதிய சாதனை படைத்துள்ளது என போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசு பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகள் வழங்கி, ஏழை எளிய மாணவர்கள் உட்பட அனைத்து மாணவர்களும் அரசுப் பேருந்துகளில் கட்டணமில்லாமல் பள்ளிக்குச் சென்று கல்வி பெறுவதை உறுதி செய்யும் திட்டத்தில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை புதிய மைல்கல்லை எட்டியுள்ளது.

2023–24ஆம் கல்வியாண்டு வரை, பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகள், மாணவர்களின் புகைப்படத் துடன் கூடிய விண்ணப்பங் களை அந்தந்த பள்ளிகளிலிருந்து பெறப்பட்டு, அரசு போக்குவரத்து கழக அலுவலர்களால் தொகுக்கப்பட்டு அச்சகங்கள் வழியாக பயண அட்டைகள் அச்சிட்டு மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்தது. இதற்கு கால தாமதம் ஏற்படுவதுடன் போக்குவரத்து கழக மற்றும் பள்ளிக் கல்வி அலுவலர்கள் அதிக அளவில் ஈடுபடுத்தப்பட வேண்டிய சூழல் இருந்தது.

மேற்கண்ட நடைமுறையை எளிமைப்படுத்தும் நோக்கில், 2024–25–ஆம் கல்வியாண்டில், பள்ளிக் கல்வித் துறையின் EMIS இணையதளத்தில் உள்ள மாணவர் தரவுகளை தொகுத்து கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகள் அச்சிடப்பட்டு பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு 25 சதவீதம் கூடுதலாக பயண அட்டைகள் வழங்கப்பட்டன. (2023–24 20.06 லட்சம், 2024–25 25.01 லட்சம் பயண அட்டைகள்).

இதனைத் தொடர்ந்து, நடப்பு கல்வி ஆண்டில் (AY 2025–26), அனைத்து தகுதியான மற்றும் தேவையுள்ள மாணவ, மாணவியர்களுக்கும் கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகளை எளிய முறையில் வழங்கிட வேண்டும் என்ற நோக்கில், பள்ளி கல்வித் துறையின் EMIS இணையதளத்தில், விருப்ப முள்ள அனைத்து மாணவ, மாணவியரின் விபரங்கள் பெறப்பட்டு கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகள் விரைந்து தயாரிக்கும் பணி போக்குவரத்துத் துறை மற்றும் பள்ளிக் கல்வித் துறையின் ஒருங்கிணைப்புடன் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இதன் விளைவாக, நடப்பு கல்வியாண்டில் (AY 202526) சுமார் 60.00 லட்சம் கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகள் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்பட்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை புதிய சாதனையை படைத்துள்ளது. மேலும் மாணவர் நலன், டிஜிட்டல் நிர்வாகம் மற்றும் துறைகளின் ஒருங்கிணைப்பு ஆகியவற்றில் தமிழ்நாடு அரசின் உறுதியான அர்ப்பணிப்பையும் இது வெளிப்படுத்துகிறது.

இதனால், தேவை உள்ள அனைத்து மாணவ, மாணவியர்களும் கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகளை பயன்படுத்தி பள்ளிக்கு எளிதாக பயணம் செய்யும் வசதியை, மாணவர்களின் நலனில் என்றும் அக்கறை கொண்டுள்ள தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை உருவாக்கியுள்ளது.

கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகள் வழங்கிய விபரம்.

கல்வியாண்டு வழங்கப்பட்ட கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகள்
(லட்சங்களில்) உயர்வு (சதவீதத்தில்)

2023–24 – 20.06
2024–25 – 25.01 – 25.0 %
2025–26 – 60.00 –140.0 %






தமிழர் திருநாளாம்
தைத் திருநாளில் சிந்தனைக்கு
விருந்து படைக்க தயாராகிறது
முரசொலி
பொங்கல் மலர்
2026
ஜனவரித் திங்கள்
15ஆம் நாள் வெளிவருகிறது.
முன் பதிவிற்கு முந்துங்கள்...
விலை ரூ.150/-